**Cross Examination**
**Dated: 19/07/2022**

ஓ.எஸ்.எண். 223/2021, DW-1, திரு.மணிகண்டன், த/பெ. ராமசாமி

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

குறுக்கு விசாரணை

இந்த வழக்கின் நான் எனக்காக மட்டும்தான் சாட்சியம் அளிக்கிறேன். என் அண்ணனுக்காக சாட்சியம் அளிக்கவில்லை. வழக்கு சொத்திற்கான உரிமை ஆவணங்கள் அனைத்தும் என் தாயார் பெயரில்தான் உள்ளது என்றால் சரிதான். என் தாயார் ஆவணம் ஏதும் எழுதி வைத்திருந்தால் அந்த ஆவணத்தின்படி நடந்து கொள்ள எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை என்றால் என் தாயார் அவ்வாறு ஆவணம் எதுவும் எழுதி வைக்கவில்லை. இந்த வழக்கில் உள்ள உயிலை நான் பார்வையிடம் வேண்டும் என்று நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து பார்வையிட்டுள்ளேனா என்றால் இல்லை. ஏற்கனவே நான் ஆவணத்தை பார்வையிட அறிவிப்பு அனுப்பி அந்த அறிவிப்பின்படி எனக்கு உயிலாவணம் வழக்கிற்கு முன்பே அனுப்பி வைக்கப்பட்டுவிட்டது என்றால் சரிதான். உயிலிலுள்ள கையெழுத்து என் தாயாரின் கையெழுத்துதான். 2005ம் ஆண்டே எனக்கும் என் மனைவிக்கும் குடும்ப அட்டை வழங்கப்பட்டுவிட்டது என்றால் சரிதான். என் தம்பியின் குடும்ப அட்டையில் என் தாயாரின் பெயர் இருந்ததா என்றால் ஆம். அதிலிருந்துதான் நான் பிரிந்து எனக்கு தனியாக குடும்ப அட்டை பெற்றுக்கொண்டேன். என் தம்பி தற்போது அமெரிக்காவில் இருக்கிறார் என்றால் எனக்கு தெரியாது. என் தந்தை இறந்துபோகும்போது வாதிக்கு திருமணம் ஆகவில்லை என்றால் சரிதான். என் அண்ணன் விஜயகுமார் தான் குடும்பத்தை பராமரித்து வந்தார் என்றால் எனக்கு திருமணம் ஆகும்வரை அவர்தான் பராமரித்து வந்தார். எனக்கு 2004ல் திருமணம் ஆனது. நாங்கள் திருமணமாகி தனித்தனியாக இருந்தோம் என்றால் 2006ம் வருடம் என் அண்ணன் தனியாக வீடு கட்டிக்கொண்டு போய்விட்டார். நான் என் தாயாருடன்தான் இருந்தார். என் தகப்பனார் 2011ம் வருடம் இறந்தார் என்றால் சரிதான். 2012ம் வருடம் தான் என் அண்ணன் வீடுகட்டி கிரகபிரவேஷம் செய்தார் என்றால் 2006ம் வருடமே வீடுகட்டி சென்றுவிட்டார். என் தந்தை அரசு ஊழியராக இருந்ததால் அவருக்கு வங்கி கணக்குகள் இருந்தது என்றால் சரிதான். என் அப்பாவிற்கு ஸ்டேக் பேங்க ஆப் இந்தியா வங்கியிலும், புதுக்கோட்டை கூட்டுறவு வங்கியிலும் கணக்கு இருந்தது. என் தந்தையின் பென்ஷன் பணம் ஸ்டேக் பேங்கில்தான் வரவு வைக்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. என் அப்பா இறப்பிற்கு பிறகு மேற்படி வங்கி கணக்கு இந்தியன் ஓவர்சீஸ் வங்கிக்கு மாற்றப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில்தான் என் அண்ணன் விவசாய கடன் வாங்கியிருந்தார் என்றாலும், வீட்டுக்கடன் வாங்கி வீடு கட்டியுள்ளார் என்றாலும் அந்த வங்கியில்தான் நெருக்கமாக வரவு செலவு கணக்குகள் வைத்திருந்தார் என்றாலும் அதுபற்றி எனக்கு தெரியாது. என் அண்ணனுடைய செல்போன் நம்பர் தான் என் தாயாரின் வங்கி கணக்குடன் இணைக்கப்பட்டிருந்தது என்றால் என் தம்பியின் செல்போன் எண்ணைதான் என் தாயாரின் வங்கி கணக்கில் இணைக்கப்பட்டிருந்தது என்ற விபரம் தெரியும். 2013ம் வருடம் என் தம்பிக்கு திருமணம் ஆனது. என் அப்பா இறந்த பிறகு என் அண்ணன்தான் வங்கி

கணக்குகளை பராமரித்து வந்தார் என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. என் அப்பா இறக்கும்போது எனக்கும் என் அண்ணனுக்கும் திருமணமாகியிருந்தது என்றால் சரிதான். என் தம்பியின் திருமணத்திற்காகவேண்டி எனது தகப்பனார் 4லட்சம் ரூபாய் பணத்தை வைப்பீடு செய்து வைத்திருந்தார் என்றாலும் அதை நானும் என் அண்ணனும் சேர்ந்து எடுத்துக்கொண்டோம் என்றால் சரியல்ல. வாதி அவருடைய திருமணத்தை அவரே கடன் வாங்கி செய்து கொண்டார் என்றால் சரியல்ல. என் அம்மாவிடம் 3 இரட்டை வடம் தங்க செயினை என்அண்னண் எடுத்துக்கொண்டார் என்று எனக்கும் என் அண்ணனுக்கும் பிரச்சினை இருந்தது என்றால் சரியல்ல. என் அம்மா தனியாக சமைத்தார் என்றால் சரியல்ல. ஆனால் என் அம்மா சமையல் செய்யும்போது அது நெருப்பு பிடித்தது என்றால் ஆம். அந்த ட்யூப் லீக் ஆனதால் அது மாற்றிக்கொடுக்கப்பட்டது. நான் திருமணம் செய்து தனியாக சென்றுவிட்டேன் என்றாலும், என் தாயார் தனியாக சமையல் செய்து வாழ்ந்து வந்தார் என்றால் சரியல்ல. என் அக்காவின் கணவர் அவருக்கு 38 வயது ஆகும் போதே இறந்துவிட்டார் என்றால் சரிதான். என் தகப்பனார் உயிலில் கண்டவாறு சொத்தை தன் மக்களுக்கு கொடுக்க ஆசைப்பட்டார் என்றாலும் அதன்படிதான் என் தாயார் உயில் எழுதி வைத்துள்ளார் என்றாலும் சரியல்ல. பூர்வீக இடத்தை விற்று என் மனைவியை டீச்சர் ட்ரைனிங் என் அப்பா படிக்க வைத்தார் என்றால் சரியல்ல. என் அண்ணனுடைய வீடு சுமார் 50 லட்சம் மதிப்பு இருக்கும் என்றால் சரிதான். அந்த வீடு என் அண்ணனுக்கு டீச்சர் வேலை கிடைப்பதற்கு முன்பே கட்டப்பட்டுவிட்டது. அவர் தையல் சொசைட்டியில் வேலை பார்த்து வந்தார். 1995-96ல் தையல் சொசைட்டியில் வேலைக்கு சேர்ந்தார். நான் முதல் விசாரணையில் சொல்லியிருப்பதுபோது நானும் என் அண்ணனும்தான் என் அப்பா, அம்மாவிடமிருந்து பணம் மற்றும் நகைகளை எடுத்துக்கொண்டோம் என்றால் சரியல்ல. என் அப்பாவிற்கு முதுகு தண்டுவட அறுவை சிகிச்சை செய்யும் போது எனக்கு வயது 14, என் அண்ணனுக்கு 19 இருக்கும். நானே என் அண்ணனோ குடும்பத்திற்காக எந்த செலவும் செய்யவில்லை என்றாலும், நானும் என் மூத்த சகோதரரும் என் அப்பா, அம்மாவிடமிருந்து பணத்தை வாங்கி செலவு செய்துகொண்டோம் என்றாலும் சரியல்ல. அதனால்தான் முன்பகுதியில் உள்ள வீட்டை வாதிக்கும், மற்ற பகுதிகளை மற்ற குழந்தைகளுக்கும் என் தாயார் எழுதி வைத்துள்ளார் என்றாலும் சரியல்ல. என் தாயார் உயில் எழுதி வைத்த விபரம் எனக்கு தெரியும் என்றாலும், என் அக்காவிற்கு சொத்து கொடுக்க கூடாது என்பதற்காக உண்மையை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
புதுக்கோட்டை.